# கல்லூரி விடுதியின் விதிமுறைகள்

விடுதியின் பொது நிர்வாகத்தை அறக்கட்டளைக் குழு கவனிக்கும், உதவியாக கல்லூரி முதல்வரையும், காப்பாளரையும் பதவி முறையில் உறுப்பினராகக் கொண்டு துணைக்குழு ஒன்று செயல்புரியும். அன்றாட அலுவல்களும், நிர்வாகமும் காப்பாளரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும். விடுதிக் காப்பாளரே விடுதியின் திறப்பு நாளையும் மூடும் நாளையும் செய்வார். விடுதியின் விதிமுறைகள் விடுதியில் தங்கும் அனைவருக்கும் பொருந்தும். விதிமுறை பற்றிய காப்பாளரின் கருத்தே முடிவானதாகும்.

விடுதி அலுவலகத்தில் விடுதியில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெறலாம். விடுதி அலுவலகம் ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் மற்ற விடுமுறை நாட்கள் தவிர அனைத்து வேலைநாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரையிலும் திறந்திருக்கும். விண்ணப்பதாரரின் தகுதிகளையும், தேவைகளையும் கணித்தே விடுதியில் இடம் தரப்படும். மறு சேர்க்கையைத் தம் உரிமையென மாணவர் கேட்கவியலாது. ஏதாவது ஒரு வகுப்பில் மேல் வகுப்புக்குச் செல்லாமல் நிறுத்தி வைக்கப்படும் மாணவருக்கு மறு சேர்க்கை மறுக்கப்படும்.

ஒவ்வொரு மாணவரும் சேர்க்கையின் போது கீழ்வரும் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

பிணைய முன்பணம் இறுதி இரண்டு மாதங்களுக்கு உரிய பாக்கியைச் சரிக்கட்ட எடுத்துக் கொள்ளப்படும். எஞ்சிய தொகை விடுதி மாணவர்க்குத் தரப்படும்.

## 1. அறைகள் ஒதுக்கீடு

விடுதியில் தங்க மற்றும் உண்போருக்கு விடுதிக் காப்பாளரே அறைகளை ஒதுக்கீடு செய்வார். விடுதி மாணவர்கள் தம் விருப்பம் போல் ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்கு மாற்றிக் கொள்ள முடியாது. ஆனால் ஒழுங்கு அமைதியைக் காக்க வேண்டி விடுதிக் காப்பாளர் அறை மாற்றங்களைச் செய்யலாம்.

ஒவ்வோர் அறையிலும் எண்களிடப்பட்ட தேவையான மேசை, நாற்காலி, கட்டில் முதலியனவும் மின் விளக்கும் இருக்கும். அறை மாணவர்கள் விடுதியை நீங்கிச் செல்லும் போது இவையனைத்தும் நல்ல நிலையில் திருப்பித் தரும் பொறுப்புடையவராவார். மின் விளக்கு இழையற்றுப்

போனாலும் தட்டுமுட்டுச் சாமான்கள் தொலைந்தோ சிதைந்தோ போனாலும் அறை மாணவர்களே ஈடு செய்ய வேண்டும்.

ஏற்கனவே உள்ளது தவிர வேறு மின் தொடர்புகளைச் செய்து கொள்ளக் கூடாது. தேவையானால் விடுதிக் காப்பாளரின் அனுமதி பெற்ற பிறகே கூடுதல் இணைப்புகளைச் செய்து கொள்ளலாம். அதற்காகத் தனிக்கட்டணம் செலுத்த வேண்டும். இக்கூடுதல் இணைப்புக்குரிய வேண்டுகோள் படிவத்தை விடுதி அலுவலகத்தில் பெறலாம். வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி போன்றவைகளைக் கண்டிப்பாகப் பயன்படுத்தக் கூடாது.

## 2. விடுதி பாக்கிகளைச் செலுத்துதல்

ஒவ்வொரு திங்களுக்கும் உரிய பற்றுச் சீட்டு தொடரும் திங்களின் பத்தாம் நாள் வாக்கில் வெளியிடப்படும். விடுதி மாணவர்கள் தம் பாக்கியை வெளியிட்ட 7 நாட்களுக்குள் கட்டிவிட வேண்டும். விடுதிப் பாக்கி உட்பட விடுதித் தொடர்பான அறிவிப்பு யாவும் பலகையில் ஒட்டப்படும். இந்த அறிவிப்பே மாணவர்களுக்குத் தனித்தனியே தரப்பட்ட அறிவிப்பாகக் கொள்ளப்படும். அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்ட இரண்டு நாட்களுக்குள் உணவுக் கட்டணச் சீட்டுகள் உரிய மாணவரின் பெற்றோர்கள் / காப்பாளர்களுக்கு அனுப்பப்படும். பணம் கட்டுவதற்கு ஒருவாரகால நீடிப்பை விடுதிக் காப்பாளர் விரும்பினால் தரலாம். பற்றுத் தொகையுடன் தண்டத் தொகையும் கட்ட வேண்டும். உதவித் தொகை பெறும் மாணவர்கள் முதல் மூன்று தினங்களுக்குரிய உணவுக் கட்டணத்தைத் தவறாமல் செலுத்த வேண்டும். தவறுவோருக்கு உணவு வழங்கப்பட மாட்டாது. அவர்கள் பெயர்கள் விடுதியின் பட்டியலிலிருந்து அகற்றப்படும். இவ்வாறு தம் உறுப்பினர் தகுதியை இழக்கும் மாணவர் தம் பாக்கித் தொகையையும் தண்டத் தொகையையும் மறு சேர்க்கைக் கட்டணத்துடன் சேர்த்துக் கட்டிய பிறகே மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

## 3. உணவு வகைப் பிரிவுகள்

ஒரு சைவ உணவு விடுதியும் ஓர் அசைவ உணவு விடுதியும் நடத்தப் படுகின்றன. ஒவ்வொரு விடுதியின் செலவுகளும் அவ்விடுதியின் உறுப்பி னர்களிடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும்.

எல்லா உணவு விடுதிகளிலும் காலைச் சிற்றுண்டி சைவ வகையேயாகும். அசைவ உணவு வாரத்தில் மூன்று நாட்களுக்கு மட்டுமே உண்டு. உணவு மண்டபத்தில் மின் விசிறிகள், மேசைகள், நாற்காலிகள் முதலியனவற்றை உண்போர் அக்கறையுடன் கையாள வேண்டும். இவற்றுக்குச் சிதைவு ஏற்படுத்தும் மாணவரைக் கண்டுபிடிக்க முடியாமற்போனால், தம்தம்

பிரிவு மாணவர்கள் அனைவரிடமும் உரிய கட்டணம் வசூலிக்கப்படும். மாணவர்கள் உணவு, சிற்றுண்டி முதலியவற்றைத் தம் விருப்பம் போல் மாற்றிக் கொள்ள முடியாது. காப்பாளரைக் கலந்து அவரது அனுமதி பெற்றே உணவு வகைகள் தீர்மானிக்கப்படும்.

ஒருவகை உணவு விடுதியிலிருந்து மறுவகை உணவு விடுதிக்கும் மாற்றிக் கொள்ளப் பருவத்தில் ஒருமுறை தான் விண்ணப்பிக்க முடியும். காப்பாளரின் அனுமதியும் பெற வேண்டும். மாற்றக் கோரும் விண்ணப்பப் படிவத்தை விடுதி அலுவலகத்தில் பெறலாம். முதற்பருவம் அல்லது இரண்டாம் பருவம் முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன் இவ்வாறு விண்ணப்பம் செய்ய வேண்டும். தொடர் விடுமுறை நாட்களில் உணவு விடுதி வேலை செய்யாது.

மாணவர் உணவு மண்டபத்தில் குவளைகளையும் மற்ற கலங்களையும் தாமாகக் கையாளுவதோ அங்கிருந்து அகற்றுவதோ கூடாது. அனுமதிக் கப்பட்ட நேரம் தவிர ஏனைய நேரங்களில் எக்காரணம் கொண்டும் உணவோ, சிற்றுண்டியோ மாணவர்கள் அறைகளில் கொண்டு வந்து வழங்கப்பட மாட்டாது.

விடுதியில் உண்ணும் மாணவர் தக்க அனுமதியுடன் நான்கு நாட்கள் முதல் பதினைந்து நாட்கள் வரை விடுதியை விட்டு வெளியே சென்றிருந்தால் உணவுக்கான செலவில் 50 விழுக்காடும் பதினைந்து நாட்களுக்கு மேலாயின் 75 விழுக்காடும் கழிக்கப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் முழுக்கட்டணம் தள்ளுபடி கிடையாது. முன்கூட்டியே தரப்படும் விடுப்புக் கடிதங்களே ஏற்றுக் கொள்வதற்குரியவை.

## 4. உணவும் சிற்றுண்டியும் வழங்கும் நேரம்

காலை உணவு காலை 7 மணி முதல் 8 மணி வரை. நண்பகல் உணவு மதியம் 12.30 மணி முதல் 2 மணி வரை. இரவு உணவு 7 மணி முதல் 9 மணி வரை. குறிப்பிட்ட நேரங்களுக்குப் பிறகு காப்பாளர் அனுமதியைப் பெற்ற பிறகே உணவோ சிற்றுண்டியோ வழங்கப்படும்

## 5. விருந்தினரும் மிகைப்படியானவரும்

விடுதியில் விருந்தினரை அனுமதிக்கும் வழக்கமில்லை. ஆயினும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது நெருங்கிய உறவினர் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படின் சீட்டு வாங்கி அதைத் தலைமை உணவு பரிமாறுபவரிடம் கொடுக்க வேண்டும். விருந்தினர் கட்டணத்தை உணவுக்குழு முடிவு செய்யும். மிகைச் சீட்டுக்களையும் தலைமை உணவு

பரிமாறுபவரிடம் கொடுக்க வேண்டும். கடன் அனுமதிக்கப்படமாட்டாது. தவிர்க்க இயலாத சூழ்நிலையில் விருந்தினர் இரவு தங்க நேரின், விடுதிக் காப்பாளரிடம் முன் அனுமதியை உரிய மாணவர் பெற வேண்டும். தங்கும் கட்டணமாக நாளொன்றுக்கு உரிய கட்டணம் கட்ட வேண்டும். இவ்வாறு தங்குவது ஒரு திங்களில் மூன்று நாளுக்கு மேல் கூடாது.

## 6. குளியல்

குளிக்கும் அறைகள் நாள் முழுவதும் திறந்திருக்கும். வெந்நீர்க்கட்டணம் செலுத்தும் மாணவர்களுக்குக் காலைப் பொழுதில் மட்டும் வழங்கப்படும்.

## 7. மருத்துவ வசதி

வாரத்தின் எல்லா வேலை நாட்களிலும் மருத்துவ அதிகாரி விடுதிக்கு வருகை புரிந்து, பிணியாளர்களைக் கவனிப்பார். மருந்துகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டும். மருத்துவச் சோதனையும் யோசனையும் இலவசம்.

## 8. விடுதியை விட்டுச் செல்ல அனுமதி

விடுதிக் காப்பாளரின் முன் அனுமதி பெறாமல் ஒருவரும் இரவு நேரத்தில் வெளியில் தங்கக் கூடாது. விடுப்புக் கடிதத்தில் காப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய அனுமதியின்றி எங்கும் வெளியே செல்லக் கூடாது. முன் அனுமதி பெறாமல் விடுதிக்கு இரவு வராமலிருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தொடர்ந்து செய்தால் அம்மாணவர் விடுதியிலிருந்து விலக்கப்படுவார்.

விடுதி மாணவர்கள் வகுப்புகளுக்கு விடுப்பு எடுக்கும் போது அவ்விடுப்பு விண்ணப்பங்களில் விடுதிக் காப்பாளரின் இசைவுக் கையொப்பத்தை பெற வேண்டும்.

## 9. கட்டுப்பாடு

விடுதி மாணவர்கள் படிப்பதற்குரிய நேரமாகிய இரவு எட்டு மணி முதல் காலை எட்டு மணி வரை முழு அமைதியைக் கடைபிடிக்க வேண்டும்.

தம் அக்கம்பக்கத்திலிருப்போர் படிக்கும் பொழுது எந்தவிதமான இடையூறுகளையும் தரக்கூடாது என்பதை எப்பொழுதும் மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். நாள்தோறும் இரவு 9.30 மணிக்கு மேல் மாணவர்கள் தவறாமல் விடுதி அறையில் இருக்க வேண்டும். இரவில் இல்லாதிருந்தால் பெருங்குற்றமாகும். தொடர்ந்து இல்லாமலிருந்தால் அம்மாணவர் விடுதியை விட்டு விலக்கப்படுவார்.

விடுதி மாணவர்கள் விடுதிக் காப்பாளரின் அனுமதி பெறாமல் எந்தவிதமான கூட்டங்களை நடத்துவதோ, அவரது ஒப்புதல் கையொப்பம் பெறாமல் சுற்றறிக்கைகளை அனுப்புவதோ, கட்டணம் வசூலிக்கும் பட்டியலை அனுப்புவதோ கூடாது. அனுமதிக்கப்பெறாத எந்த நடவடிக்கையும் கடுமையாகக் கருதப்படுவதுடன் குற்றவாளி தண்டணைக்குரியவருமாவார்.

விடுதி அறைகளில் உள்ள தட்டு முட்டுச் சாமான்கள் இணைப்புகள் முதலியவற்றுக்கு எந்தச் சிதைவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மாணவர்கள் கடமையாகும். சிதைவு காரணமாக ஏற்படும் செலவினங்களை மாணவர்களே ஏற்க வேண்டும். விடுதியில் உள்ள பொருட்கள், குழாய்கள், மின் தொடர்புகள் முதலியவற்றிகுச் செய்யப்படும் சிதைவுகளுக்கு காரண மான மாணவர்களே அவற்றைத் தம் செலவில் சீராக்க வேண்டும். தவறிழைத்த மாணவர்கள் அனைவரும் கூட்டாக உரிய பணத்தைக் கட்ட வேண்டும்.

சீட்டாடுதல், சுவர்களில் கிறுக்குதல், குப்பைக் காகிதங்களைக் கண்ட இடத்தில் வீசி எறிதல், மதுபானங்கள் அருந்துதல், விடுதியில் உள்ள மரங்களைக் களைதல் செயல்களில் அறவே ஈடுபடக் கூடாது.

விடுதியில் உள்ள பணியாளர்களிடையே மாணவர்கள் தலையீடு கூடாது. பணியாளர்களின் முரட்டுத்தனம், முறைகேடான நடத்தை ஏதும் இருப்பின் அவைபற்றி விடுதிக் காப்பாளரிடம் தெரிவிக்க வேண்டுமேயன்றி மாணவர்களே நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

பணத்தையும் விலை உயர்ந்த பொருள்களையும் அறைகளில் வைக்கக் கூடாது. மாணவர்கள் ஏதேனும் பொருளை இழந்தால் நிர்வாகம் பொறுப்பேற்காது. மாணவர்கள் விடுதியில் உள்ள அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் பணத்தைப் போட்டு வைக்கலாம்.

மூத்த மாணவர்கள் விடுதியின் விதிமுறைகளைப் போற்றுவதில் தமக்குள்ள பொறுப்பை உணர வேண்டும். மூத்த மாணவர்கள் கூறும் அறிவுரைகளை விடுதி நலம் கருதி இளநிலை மாணவர்கள் நல்ல நோக்கத்தில் ஏற்று நடக்க வேண்டும்.

விடுதியின் விதிமுறைகளை மீறுவதும் முறைகேடாக நடந்துக் கொள்வதும் குற்றங்களாகும். குற்றவாளிக்குத் தண்டம் விதிக்கப்படும். வரம்பு மீறும் மாணவரைக் காப்பாளர் உடனடியாக நீக்கிவிட உரிமையுண்டு.